## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திடும் குழு!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தொகுதி உடன்பாடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட

**தி.மு.க. தலைமைக் கழகம் அமைத்துள்ள குழு.**

குழுத் தலைவர் : கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**

குழு உறுப்பினர்கள் :

**கே.என்.நேரு**
(முதன்மைச் செயலாளர், தி.மு.க.)

**திருச்சி சிவா**
(துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.)

**ஆ. இராசா**
(துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.)

**ஆர்.எஸ். பாரதி**
(தி.மு.க. அமைப்புச் செயலாளர்)

**எ.வ. வேலு**
(தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்)

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
(தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்)

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 21.02.2026.


**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### "திராவிட மாடல்" ஆட்சியின் -

# புதிய ஓய்வூதியத் திட்டத்தை அரசு ஊழியர்கள் வரவேற்கிறார்கள்!

## சட்டப் பேரவையில் – பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

**சென்னை, பிப். 22 - 'திராவிட மாடல்' அரசின் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அரசு ஊழியர்கள் எல்லாம் வரவேற்கிறார்கள் என்று சட்டப்பேரவையில் விவாதத்தின் நடுவே குறுக்கீட்டுப் பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு விளக்கம் அளித்தார்.**



அவர் குறிப்பிட்டதாவது:-

ஓய்வூதியத் திட்டம் என்பது 2003லேயே நிறுத்தப்பட்ட ஒரு திட்டம் தான். ஆனால், நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னோம், நாங்கள் இல்லையென்று மறுக்கவில்லை. புத்தகம் இருக்கிறது, தேர்தல் அறிக்கையில் சொன்னோம். கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்தோம். அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தோம். அரசு அலுவலர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். ஏறத்தாழ 12 இலட்சம் பேருக்கு மேல் வலியுறுத்தி வந்தார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைக்கச் சொன்னார்கள். அதில் என்னையும், நம்முடைய நிதித் துறை அமைச்சர் அவர்களையும், அதே போன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கொண்டு 3 பேர் கொண்ட குழு அமைக்கச் சொன்னார்கள். ஒரு முறைக்கு பல முறை அவர்களை அழைத்து பேசினோம்.

நிதி நிலைமைகளை எல்லாம் எடுத்து நாங்கள் சொன்னோம். அதையெல்லாம் எடுத்துக்கொண்டு அவர்கள், நாங்கள் இப்போது என்ன அறிவித்திருக்கிறோமோ இந்த தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டு, ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, YMCA Groundsல் அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்டி ஒரு கூட்டத்தையே நடத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)


நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இதையாவது நாங்கள் செய்திருக்கிறோம். உங்கள் கணக்கின்படி 100 சதவிகிதம் செய்யவில்லை என்று வைத்துக்கொண்டாலும், 95 சதவிகிதம் செய்திருக்கிறோம். அதனை அவர்களே ஏற்றுக்கொண்டார்களே! யார் பலனை அனுபவிக்கிறார்களோ அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறபொழுது இதில் என்ன கேள்வி எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது? ஒன்று. (குறுக்கீடுகள்) ஒரேயொரு நிமிடம். ஒரேயொரு நிமிடம். தொடர்ந்து தேர்தல் அறிக்கையில் நீட் குறித்து சொன்னீர்களே, அது என்ன ஆயிற்று, இது என்ன ஆயிற்று என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் எப்படி தேர்தல் அறிக்கை புத்தகத்தை வைத்திருக்கிறீர்களோ, அதே போன்று பளபளவென்று அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை புத்தகத்தை நானும் வைத்திருக்கிறேன். நான்கூட எதிர்பார்த்தேன். இதே மாமன்றத்தில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது, அமெரிக்க சுதந்திர தேவி சிலையைப்போல மதுரை மண்ணிலே 100 கோடி ரூபாயில் சிலை நிறுவப்படும் என்று சொன்னீர்கள். இதுவரை நிறுவி இருக்கிறீர்களா? இது முடியாத காரியமா? நடக்கவில்லையே?

இவ்வாறு அமைச்சர் எ. வ.வேலு குறிப்பிட்டார்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

# திருச்சி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை தொடர்ந்து, திருச்சி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று (22/02/2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

### 1,045 குளங்களில் இப்போது தண்ணீர் கொண்டுபோய் சேர்க்கப்படுகிறது!

# 'அத்திக்கடவு - அவினாசி திட்டம்' முழுமை பெற்று விட்டது!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் சு.முத்துசாமி தகவல்!

**சென்னை, பிப். 22- சட்டப் பேரவையில் இடைக் கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, 'அத்திக்கடவு - அவினாசி திட்டம்' குறித்து குறிப்பிட்டார்.**

அப்போது குறுக்கிட்டு அமைச்சர் சு.முத்துசாமி அளித்த விளக்கம் வருமாறு:-

அத்திக்கடவு அவினாசித் திட்டம். அந்தத் திட்டம் முழுமை பெற்றுவிட்டது என்பதையும், 1,045 குளங்களில் இப்போது தண்ணீர் கொண்டுபோய் சேர்க்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தத் திட்டம் நல்ல திட்டம். நான் அதைக் குறை சொல்லவில்லை. ஆனால், அதை செயல்படுத்திய முறை, அதிலே பல technical problems இருக்கின்றன. அதைச் சரிசெய்வதற்காக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

ஒரு ஆண்டுக்கு 70 நாட்கள்தான் தண்ணீர் அதிலே கொண்டுபோக முடியும் என்ற நிலை இருக்கிறது.

அது ஆரம்பிக்கப்படுகிறபோது ஒவ்வொரு குளத்திற்கும் தண்ணீர் போவதில்லை. அதைச் சரிசெய்வதற்கு 30 நாட்கள் ஆகிவிடுகின்றன. எனவே,



தற்போது வேறுவிதமான நிலையை உருவாக்கி தண்ணீர் எடுப்பதற்கு என்றைக்கு முடிவு செய்கிறார்களோ அதிலிருந்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாத காலத்திற்கு முன்பே அங்கு borewellல் உள்ள தண்ணீரை எடுத்து, அந்தக் குளத்திற்கு செல்கின்ற pipeஐ ஒழுங்கு செய்ய வேண்டுமென்று நாங்கள் அந்த இடத்திற்கே சென்று அவர்களிடத்திலே பேசி இப்போது சரிசெய்யப்பட்டு ஏறத்தாழ 1,045 குளமும் தற்போது நிரப்பப்படுகின்றன.

இரண்டாவது கட்டம் அதிலேயே கொண்டு செல்ல முடியாது, வேறு திட்டம்தான் போட வேண்டும். அதுவும் ஆய்வில் இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பதில் அளித்தார்.

# சட்டமன்றத் தேர்தல்: தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## அண்ணா அறிவாலயத்தில் கழகத்தினர் குவிந்தனர்!

சென்னை, பிப். 22- சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களை பெற்றனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்க உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம்






இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. விருப்பமனு விநியோகத்தை கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள் தொடங்கி வைத்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க.. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.